## திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(ஜுன் 24-ம் தேதி முதல் ஜுன் 28-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (19.6.15- 22.6.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 21.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 33- 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26- 27 |
| வானம் (ஆக்டா) | 2- 6 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 56- 67 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 46- 62 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 2- 8 |
| காற்றின் திசை | 230- 320 |

**28.6.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>24.6.15 | நாள் 2<br>25.6.15 | நாள் 3<br>26.6.15 | நாள் 4<br>27.6.15 | நாள் 5<br>28.6.15 |
| மழை (மி.மீ.) | 3 | 3 | 5 | 15 | 12 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 37 | 37 | 35 | 35 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 26 | 26 | 26 |
| வானம் (ஆக்டா) | 4 | 4 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 50- 60 | 51- 61 | 55- 68 | 56- 69 | 57- 70 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 6/ மேற்கு | 6/ மேற்கு | 6/ மேற்கு | 6/ மேற்கு | 6/ மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | துரித தூர்கட்டும் பருவம் | துரித தூர்கட்டும் பருவத்திலுள்ள நெற்பயிருக்கு அசோல்லா நுண்ணுயிர் உரத்தை நட்ட 30ம் நாளில் களையெடுக்கும்போது மண்ணோடு சேர்க்கவும். இப்பருவத்தில் தழைச்சத்து இடுவது மிக முக்கியமாதலால் இலை வண்ண அட்டையை பயன்படுத்தி இலையின் வண்ணத்தை கண்காணித்து தேவைக்கேற்ப தழைச்சத்து உரமிடவும். பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தும் |

| | | |
|---|---|---|
| | | விதத்தில் மண்ணில் முடி அளவு தடிமன்கொண்ட வெடிப்புகள் தோன்றிய பின்பு 2.5 செ.மீ. அளவு நீர் பாய்ச்சவும்.<br>நெல்லில் வறட்சியை சமாளிக்க 1 சத யூரியா + 2 சத டி.ஏ.பி. + 1 சத பொட்டாசியம் குளோரைடு கரைசலை பூக்கதிர் உருவாகும் பருவத்திலும், பின்பு 10 நாட்கள் கழித்தும் தெளிக்கவும். மேலும் பி.பி.எப்.எம். என்ற பாக்டீரியா கரைசலை பூக்கதிர் உருவாகும் பருவத்திலும் 10 நாட்கள் கழித்தும் தெளிக்கவும். |
| பாசிப்பயறு | நாற்று பருவம் | பாசிப்பயறில் விதைத்த 3-ம் நாளில் தெளிக்கப்படும் களைக்கொல்லி பயன்படுத்தப்படவில்லையெனில் குயிசலோபாப் எத்தில் 5% EC 1 லிட்டர்/ எக்டர் (2 மி.லி./ லிட்டர்) மற்றும் இமாசெதபைர் 10% SL 0.5 லிட்டர்/ எக்டர் (1 மி.லி./ லிட்டர்) களைக்கொல்லியை விதைத்த 15- 20ம் நாளில் தெளித்து களைகளை கட்டுப்படுத்தவும். |
| கரும்பு | துரித வளர்ச்சி பருவம் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக காற்றின் வேகத்தை ஒட்டி பயிர் சாயாமல் தடுப்பதற்காக கரும்பில் அடுத்தடுத்த வரிசைகளில் உள்ள பயிர்களின் தோகையை ஒன்றோடொன்று கட்டவும். வாழைக்கு முட்டு அணைக்கவும். |
| வாழை | பூ மொட்டு உருவாகும் பருவம் | |

குறுஞ்செய்தி-: மழை- ஜுன் 24-28: 3,3,5,15& 12 மி.மீ. பாசிப்பயறு-களைக்கொல்லி- குயிசலோபாப் எத்தில் 2 மி.லி./லிட்டர்& இமாசெதபைர் 1 மி.லி./லிட்டர் 20ம் நாளில் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி